| | |
|---|---|
| Coming Together for Art | கலைக்காக ஒன்றிணைதல் |
| The 1980s saw a new sense of dynamism in Singapore's cultural scene, with artists increasingly organising their own multidisciplinary events. In 1982, the Singapore Festival of Arts played a key role in integrating corporate support and including international productions. By the late 1980s, as more art practitioners left their conventional jobs or returned from overseas, artists looked to deepen the relationship between art and civic society. | 1980-களில் சிங்கப்பூரின் கலாச்சாரச் சூழலில் ஒரு புதிய துடிப்புத்தன்மை காணப்பட்டது; கலைஞர்கள் பல்வேறு கலை வடிவங்களை உள்ளடக்கிய தங்கள் சொந்த நிகழ்ச்சிகளை அதிகளவில் ஏற்பாடு செய்தனர். 1982-இல், பெருநிறுவனங்களின் ஆதரவை ஒருங்கிணைப்பதிலும் சர்வதேசத் தயாரிப்புகளை உள்ளடக்குவதிலும் சிங்கப்பூர் கலை விழா முக்கியப் பங்காற்றியது. 1980-களின் பிற்பகுதியில், அதிகமான கலைப் பயிற்சியாளர்கள் தங்கள் வழக்கமான பணிகளைக் கைவிட்டோ அல்லது வெளிநாடுகளிலிருந்து திரும்பியோ வந்த நிலையில், கலைஞர்கள் கலைக்கும் குடிமைச் சமூகத்திற்கும் இடையிலான உறவை ஆழப்படுத்த முற்பட்டனர். |
| Inspired by the festival and prior experiences with theatre groups, Gilles Massot organised public events such as the Yin Yang Festival (1987) and the Art Commandos (1988). These events brought together practitioners of literature, art, dance, performance art and music. In 1988, Tang Da Wu established an artist colony in Sembawang, which later became The Artists Village. Another collective of art students from the Nanyang Academy of Fine Arts gathered at the Goethe-Institut Singapur to organise *Trimurti* (1988), an exhibition featuring installations, performances and other time-based events that probed prevailing notions of multiculturalism and multiracialism in Singapore. | கலை விழா மற்றும் நாடகக் குழுக்களுடன் இருந்த அனுபவங்களால் ஊக்கமடைந்த ஜில்ஸ் மாசோ, யின் யாங் விழா (1987), ஆர்ட் கமாண்டோஸ் (1988) போன்ற பொது நிகழ்வுகளை ஏற்பாடு செய்தார். இந்த நிகழ்வுகள் இலக்கியம், கலை, நடனம், நிகழ்த்து கலை மற்றும் இசை ஆகிய துறைகளின் பயிற்சியாளர்களை ஒன்றிணைத்தன. 1988-இல், டாங் டா வு ஒரு கலைஞர் குடியிருப்பை செம்பாவாங்கில் நிறுவினார், பின்னர் அது தி ஆர்டிஸ்ட்ஸ் வில்லேஜ் என்று அழைக்கப்பட்டது. நன்யாங் |

| | |
|---|---|
| | நுண்கலைக் கழகத்தைச் சேர்ந்த மற்றொரு கலை மாணவர் குழு, கோதே-இன்ஸ்டிடியூட் சிங்கப்பூரில் ஒன்றுகூடி, *திரிமூர்த்தி* (1988) என்ற கண்காட்சியை ஏற்பாடு செய்தனர். இதில் நிறுவல் கலைப்படைப்புகள், நிகழ்த்து கலைகள் மற்றும் பிற கால அடிப்படையிலான நிகழ்வுகள் இடம்பெற்றன. இவை அக்காலத்தில் நிலவிய பன்முகக் கலாச்சாரம் மற்றும் பல இனத்தன்மை குறித்த கருத்தாக்கங்களை ஆராய்ந்தன. |
| A Space of Their Own<br><br>With the government's redevelopment of rural areas, The Artists Village lost its space at Lorong Gambas in 1990. Other art collectives and organisations found semi-permanent venues, such as The Substation (1990–2021), 5th Passage (1991–1994) and Plastique Kinetic Worms (1998–2008), which became hubs of interdisciplinary practices. Artists used these locations to initiate community-based practices in public spaces—5th Passage operated within Parkway Parade, a shopping mall, while Plastique Kinetic Worms occupied an unused historical shophouse in Chinatown.<br><br>Adopting a collaborative model of working with various public institutions and artist-run spaces, The Artists Village staged a series of art events, such as A Sculpture Seminar (1991) and The Space (1992). Hosted in conjunction with the Singapore Festival of Arts Fringe at the now-demolished Hong Bee Warehouse, The Space provided a platform for emerging artists. Their inquiries into issues of self and gender | தங்களுக்கான ஓர் இடம்<br><br>அரசின் கிராமப்புற மேம்பாட்டால், தி ஆர்டிஸ்ட்ஸ் வில்லேஜ் 1990-இல் லொரோங் கம்பாஸில் அமைந்திருந்த தனது இடத்தை இழந்தது. பிற கலைக் குழுக்களும் அமைப்புகளும் தி சப்ஸ்டேஷன் (1990–2021), பிஃப்த் பேசேஜ் (1991–1994) மற்றும் பிளாஸ்டிக் கைனெடிக் வார்ம்ஸ் (1998–2008) போன்ற அரை பகுதி நிரந்தரமான இடங்களைக் கண்டறிந்தன; இவை பல்வேறு கலைத் துறைகளை ஒருங்கிணைக்கும் செயல்பாடுகளின் மையங்களாகத் திகழ்ந்தன. கலைஞர்கள் பொது இடங்களில் சமூகம் சார்ந்த செயல்பாடுகளைத் தொடங்குவதற்காக இந்த இடங்களைப் பயன்படுத்தினர்—பிஃப்த் பாசேஜ் ஒரு வணிக வளாகமான பார்க்வே பரேடில் |

| | |
|---|---|
| spurred The Substation to launch an annual arts programme called The New Criteria. | இயங்கியது, அதே சமயம் 'பிளாஸ்டிக் கைனடிக் வார்ம்ஸ்' சைனா டவுனில் பயன்படுத்தப்படாத ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கடை வீட்டில் இயங்கியது.<br><br>பல்வேறு பொது நிறுவனங்கள் மற்றும் கலைஞர்கள் இயக்கும் இடங்களுடன் கூட்டாக செயல்படும் முறையைப் பின்பற்றி, தி ஆர்டிஸ்ட்ஸ் வில்லேஜ் பல்வேறு கலை நிகழ்வுகளை நடத்தியது; அவற்றில் சிற்பக் கருத்தரங்கம் (1991), தி ஸ்பேஸ் (1992) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தற்போது இடிக்கப்பட்ட ஹாங் பீ வேர் ஹவுஸில் சிங்கப்பூர் கலை விழா ஃபிரிஞ்சுடன் இணைந்து நடத்தப்பட்ட தி ஸ்பேஸ் புதிய கலைஞர்களுக்கான மேடையாக இருந்தது. சுயம் மற்றும் பாலினம் தொடர்பான பிரச்சனைகள் குறித்த அவர்களின் ஆய்வுகள், தி நியூ கிரைட்டீரியா என்றழைக்கப்படும் வருடாந்திர கலை நிகழ்ச்சியான தி சப்ஸ்டேஷனைத் தொடங்கத் தூண்டியது. |
| Navigating the Interdisciplinary<br><br>Following the recommendations of the Advisory Council on Culture and the Arts (ACCA) in 1989, Singapore saw a major expansion of government infrastructure from the mid-1990s, which supported and enabled the growth of the nation's cultural landscape. At the same time, changes in education introduced subjects such as English Literature and | பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்துச் செயல்படுதல்<br><br>1989-இல் கலாச்சாரம் மற்றும் கலைகளுக்கான ஆலோசனை குழுவின் (ACCA) பரிந்துரைகளைத் தொடர்ந்து 1990களின் நடுப்பகுதியில் இருந்து, சிங்கப்பூரில் அரசின் |

| | |
|---|---|
| Theatre Studies into school curricula, broadening students' exposure to the arts. This exposure became a formative experience for artists who later crossed into other disciplines in their practice.<br><br>This broadening of pedagogical frameworks was mirrored by the founding of new theatre groups in Singapore. These groups allowed artists to try different roles behind the scenes in theatre productions. The establishment of the Esplanade and its interdisciplinary programme created more opportunities for artistic exchange between both local and international artists. Further partnerships with events such as the M1 Singapore Fringe Festival, an annual festival of live performances organised by The Necessary Stage, enabled the Esplanade to serve as a site for interdisciplinary experiments and artistic provocations. | உள்கட்டமைப்புகள் பெரிதும் விரிவடைந்தது<br>இது நாட்டின் கலாச்சாரச் சூழலின் வளர்ச்சிக்கு ஆதரவளித்து, அதனைச் சாத்தியமாக்கியது. அதே வேளையில், கல்வியில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் ஆங்கில இலக்கியம் மற்றும் நாடகக் கலைப் பாடங்களை பள்ளிப் பாடத்திட்டத்தில் இணைத்தன; இதன் மூலம் கலைகள் குறித்த மாணவர்களின் அறிமுகம் விரிவடைந்தது. இந்த அனுபவம், பிற்காலத்தில் தங்கள் கலைச் செயல்பாட்டில் பிற துறைகளுக்கு மாறிய கலைஞர்களுக்கு ஒரு முக்கிய அடித்தளமாக அமைந்தது.<br><br>கற்பித்தல் கட்டமைப்புகளின் இந்த விரிவுபடுத்தல், சிங்கப்பூரில் புதிய நாடகக் குழுக்கள் தொடங்கப்பட்டதன் மூலம் பிரதிபலிக்கப்பட்டது. நாடகத் தயாரிப்புகளில் திரைக்குப் பின்னால் பல்வேறு பணிகளைச் செய்து பார்க்க இந்தக் குழுக்கள் கலைஞர்களுக்கு வாய்ப்பளித்தன. எஸ்பிளனேட் மற்றும் அதன் பல்வேறு கலைத்துறைகளை உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டம் ஆகியவை, உள்ளூர் மற்றும் சர்வதேசக் கலைஞர்களுக்கு இடையிலான கலைசார் பரிமாற்றத்திற்கான கூடுதல் வாய்ப்புகளை உருவாக்கின. மேலும், தி நெசசரி ஸ்டேஜ் அமைப்பால் ஏற்பாடு செய்யப்படும் நேரடி நிகழ்ச்சிகளின் வருடாந்திர விழாவான எம்1 |

| | |
|---|---|
| | சிங்கப்பூர் ஃபிரிஞ்ச் விழா போன்ற நிகழ்வுகளுடனான மேலதிக கூட்டாண்மைகள், எஸ்பிளனேட்டை பல்துறை முயற்சிகள் மற்றும் கலை சவால்களுக்கு ஒரு இடமாக மாற்றின. |
| Gilles Massot<br>(b. 1955, France)<br>Yin Yang One and Many<br>1987<br>Acrylic and gouache on canvas and newspaper<br>Collection of National Gallery Singapore<br>2021-00507<br><br>Yin Yang One and Many is a double-sided portrait and collage. The title reflects French- born Singaporean artist Gilles Massot's view of life as an exchange between self and society. Massot moved to Singapore in 1981. In 1987, he and artist Simon Wong launched the Yin Yang Festival at the Kent Ridge Guild House, National University of Singapore, with student volunteers including Vincent Leow, who later became an artist. The solo figure on the left is based on a drawing of his life partner. | ஜில்ஸ் மாசோ<br>(பிறப்பு 1955, பிரான்ஸ்)<br>யின் யாங் ஒன் மற்றும் பல<br>1987<br>கேன்வாஸ் மற்றும் செய்தித்தாளில் அக்ரிலிக் மற்றும் கூவாஷ்<br>சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் சேகரிப்பு 2021-00507<br><br>யின் யாங் ஒன் மற்றும் பல என்பது இருபுறமும் உள்ள உருவப்படம் மற்றும் படத்தொகுப்பு. இந்த தலைப்பு, பிரான்சில் பிறந்த சிங்கப்பூரிய கலைஞர் ஜில்ஸ் மாசோவின், வாழ்க்கை என்பது சுயம் மற்றும் சமூகம் இடையே பரிமாற்றம் என்ற பார்வையை பிரதிபலிக்கிறது. மாசோ 1981-இல் சிங்கப்பூருக்குக் குடிபெயர்ந்தார். 1987-இல், அவரும் கலைஞர் சைமன் வோங்கும் இணைந்து, பிற்காலத்தில் கலைஞரான வின்சென்ட் லியோ உள்ளிட்ட தன்னார்வலர் மாணவர்களுடன், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் கென்ட் ரிட்ஜ் கில்ட் ஹவுஸில் யின் யாங் திருவிழாவைத் தொடங்கினர். இடதுபுறத்தில் உள்ள தனி உருவம், அவரது வாழ்க்கைத்துணையின் |

| | |
|---|---|
| | ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டது. |
| “In my second year at LASALLE, I joined the Art Commandos Camp, where I was mentored by Gilles [Massot], Vincent Leow, Norensha Sahari and Gordon… As a student, this camp helped me understand how different art forms can come together and create new artwork through experimentation. Art Commandos gave me both performance and visual art experiences [including installations].”<br>Ahmad Abu Bakar, 2025.<br><br>A former member of the Art Commandos and The Artists Village, Ahmad Abu Bakar contributed to early museum programmes before furthering his studies in Tasmania. He continues to explore geometric and abstract forms in his installations while teaching across institutions. | “LASALLE-இல் எனது இரண்டாம் ஆண்டில், நான் ‘ஆர்ட் கமாண்டோஸ் கேம்ப்’-இல் இணைந்தேன்; அங்கு ஜில்ஸ் [மாசோ], வின்சென்ட் லியோ, நோரென்ஷா சஹாரி மற்றும் கார்டன் ஆகியோர் எனக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்தனர்… ஒரு மாணவராக, பரிசோதனை முயற்சிகள் மூலம் பல்வேறு கலை வடிவங்கள் ஒன்றிணைந்து எவ்வாறு புதிய கலைப்படைப்புகளை உருவாக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ள இந்த முகாம் எனக்கு உதவியது. ஆர்ட் கமாண்டோஸ், நிகழ்த்து கலை மற்றும் காட்சி கலை [நிறுவல்கள் உட்பட] அனுபவங்களை வழங்கியது.”<br>அஹ்மத் அபு பக்கர், 2025.<br><br>ஆர்ட் கமாண்டோஸ் மற்றும் தி ஆர்டிஸ்ட்ஸ் வில்லேஜ் ஆகியவற்றின் முன்னாள் உறுப்பினரான அஹ்மத் அபு பக்கர், டாஸ்மேனியாவில் தனது மேல்படிப்பைத் தொடர்வதற்கு முன்பு, ஆரம்பகால அருங்காட்சியகத் திட்டங்களுக்குப் பங்களித்தார். பல்வேறு நிறுவனங்களில் கற்பித்தல் பணியை மேற்கொள்வதோடு, தனது கலை நிறுவுதல்களில் வடிவியல் மற்றும் அருவ வடிவங்களை அவர் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறார். |
| “I reminisced about the time spent at [The] Artist[s] Village of the rich and thought-provoking conversations about | "[தி] ஆர்ட்டிஸ்ட்[ஸ்] வில்லேஜ்ஜில் கழித்த காலத்தையும், கலை மற்றும் பிற விஷயங்கள் குறித்து |

| | |
|---|---|
| art and everything else. Despite taking the long walk from the bus stop to 61-B Lorong Gambas, I always looked forward to immersing in the creative energy and the kampong spirit surrounded by nature, art, and artists, the mood there was always inspiring.”<br>Vincent Leow, 2025.<br><br>Vincent Leow is an artist, educator and cultural organiser whose practice spans a wide range of genres including sculpture, installation, performance art and painting.<br>As a student at LASALLE College of the Arts, Leow was an active participant and student leader in formative events like the Yin Yang Festival and Art Commandos, as well as The Artists Village. He represented Singapore at the Venice Biennale in 2007 and was awarded the Cultural Medallion in 2020. | அங்கு நடைபெற்ற செழுமையான, சிந்தனையைத் தூண்டும் உரையாடல்களையும் நான் நினைவுகூர்ந்தேன். பேருந்து நிறுத்தத்திலிருந்து 61-B லோரோங் கம்பாஸ் வரை நீண்ட தூரம் நடந்தபோதிலும் இயற்கை, கலை மற்றும் கலைஞர்களால் சூழப்பட்ட அந்தப் படைப்பாற்றல் சக்தியிலும், கிராமிய உணர்விலும் மூழ்கித் திளைப்பதை நான் எப்போதும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன்; அங்குள்ள மனநிலை எப்போதுமே ஊக்கமளிப்பதாக இருந்தது."<br>வின்செண்ட் லியோ, 2025.<br><br>வின்செண்ட் லியோ ஒரு கலைஞர், கல்வியாளர் மற்றும் கலாச்சார ஒருங்கிணைப்பாளர் ஆவார் சிற்பம், நிறுவல் கலை, நிகழ்த்து கலை மற்றும் ஓவியம் உள்ளிட்ட பல்வேறு கலை வடிவங்களில் இவரது செயல்பாடுகள் அமைந்துள்ளன.<br>LASALLE கலைக் கல்லூரியில் மாணவராக இருந்தபோது, யின் யாங் திருவிழா மற்றும் ஆர்ட் கமாண்டோஸ் போன்ற ஆளுமையை வடிவமைத்த நிகழ்வுகளிலும், தி ஆர்டிஸ்ட்ஸ் வில்லேஜிலும் ஒரு தீவிர பங்கேற்பாளராகவும் மாணவர் தலைவராகவும் லியோ விளங்கினார். அவர் 2007-இல் வெனிஸ் பியனாலேவில் சிங்கப்பூரைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்; மேலும் 2020-இல் கல்ச்சுரல் மெடாலியன் விருதைப் பெற்றார். |

| | |
|---|---|
| "We moved into 61-B Lorong Gambas on the 20th of June 1988 [...] All of these visual things were so interesting for me to draw. I could just sit outside our kampong and draw the scenery in front of me or wander to the neighbours and draw there. It was a world so new to me and it was a privilege to see and document this disappearing way of life in Singapore." Hazel McIntosh, 2025.<br><br>Hazel McIntosh is an artist, illustrator and educator who trained at St. Martin's School of Art in the United Kingdom before moving to Singapore in the 1980s. Living in the rural area of Lorong Gambas, she drew inspiration from its landscape and community. A lifelong teacher and printmaker, McIntosh taught at the Nanyang Academy of Fine Arts between 1989 and 1992. | "நாங்கள் 1988-ஆம் ஆண்டு ஜூன் 20-ஆம் தேதியன்று 61-B லோரோங் கம்பாஸ் பகுதிக்குக் குடிபெயர்ந்தோம் [...] கண்ணுக்குத் தெரியும் இக்காட்சிகள் அனைத்தையும் வரைவது எனக்கு மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. நான் எங்கள் கிராமப்புறக் குடியிருப்புக்கு வெளியே அமர்ந்து எனக்கு முன்னால் உள்ள காட்சியை வரையலாம், அல்லது அண்டை வீட்டாருடைய இடத்திற்குச் சென்று அங்கே வரையலாம். அது எனக்கு முற்றிலும் புதியதொரு உலகம்; சிங்கப்பூரில் மறைந்து வரும் இந்த வாழ்க்கை முறையைக் கண்டு,<br>அதனைப் பதிவு செய்தது எனக்குக் கிடைத்த ஒரு பெரும் பேறு."<br>ஹேசல் மெக்கின்டோஷ், 2025.<br><br>ஹேசல் மெக்கின்டோஷ் ஒரு கலைஞர், ஓவியர் மற்றும் கல்வியாளர் ஆவார்; இவர் 1980-களில் சிங்கப்பூருக்குக் குடிபெயர்வதற்கு முன்பு ஐக்கிய இராச்சியத்தில் உள்ள செயின்ட் மார்ட்டின்ஸ் ஸ்கூல் ஆஃப் ஆர்ட்டில் பயிற்சி பெற்றார். லோரோங் கம்பாஸின் கிராமப்புறப் பகுதியில் வசித்த அவர், அங்கிருந்த நிலப்பரப்பு மற்றும் சமூகத்திடமிருந்து உத்வேகம் பெற்றார். வாழ்நாள் முழுவதும் ஆசிரியராகவும் அச்சுக்கலைஞராகவும் இருந்த மெக்கின்டோஷ், 1989 முதல் 1992 வரை நான்யாங் நுண்கலைக் கழகத்தில் கற்பித்தார். |
| Tang Da Wu (唐大雾) | டாங் டா வு (唐大雾) |

| | |
|---|---|
| (b. 1943, Singapore)<br>Just in Case<br>1991<br>Wood, metal and electric torch<br>Collection of Singapore Art Museum<br>1993-01667<br><br>Just in Case plays with both words and materials. A sealed wooden crate, marked “from Burma to Singapore,” sits with two holes in its top surface. A torch is mounted over one of the holes. Tang Da Wu invites viewers to look inside. Through the second hole, the word “JUST” comes into view. The title hints at layers of meaning: “justice” and “encased,” prompting viewers to consider the social and political conditions in Myanmar —viewed, quite literally, from a distance in Singapore. | (பிறப்பு: 1943, சிங்கப்பூர்)<br>ஜஸ்ட் இன் கேஸ்<br>1991<br>மரம், உலோகம் மற்றும் மின்விளக்கு (டார்ச்)<br>சிங்கப்பூர் கலை அருங்காட்சியகத்தின் சேகரிப்பு<br>1993-01667<br><br>ஜஸ்ட் இன் கேஸ் என்பது சொற்களையும் பொருட்களையும் விளையாட்டாகப் பயன்படுத்தும் படைப்பு. "பர்மாவிலிருந்து சிங்கப்பூருக்கு" என்று குறிக்கப்பட்ட, மூடி முத்திரையிடப்பட்ட ஒரு மரப்பெட்டி, அதன் மேல் பகுதியில் இரண்டு துளைகளுடன் வைக்கப்பட்டிருக்கிறது. துளைகளில் ஒன்றின் மீது ஒரு டார்ச் பொருத்தப்பட்டுள்ளது. டாங் டா வூ பார்வையாளர்களை உள்ளே உற்றுநோக்குமாறு அழைக்கிறார். இரண்டாவது துளையின் வழியாக, "JUST" என்ற சொல் கண்ணுக்குத் தெரிகிறது. தலைப்பு பின்வரும் பல்வேறு அர்த்தங்களை சுட்டிக்காட்டுகிறது: “நீதி” மற்றும் “மூடப்பட்ட” என்ற கருத்துகளை முன்வைத்து, பார்வையாளர்கள் மியான்மாரின் சமூக மற்றும் அரசியல் சூழலை சிந்திக்க ஊக்குவிக்கிறது<br>—இவை, சொந்தமாகவே, சிங்கப்பூரில் தொலைவில் இருந்து பார்க்கப்படுகின்றன. |
| “Trimurti is a Sanskrit word describing three forms usually associated with the Hindu godhead of Brahma, Vishnu and Shiva. Here, we use it to define a manifestation of three forces, | “திரிமூர்த்தி என்பது மூன்று வடிவங்களை விவரிக்கும் ஒரு சமஸ்கிருத சொல், இது பொதுவாக |

| | |
|---|---|
| similar to nature: Creation, Preservation and Destruction."<br>Trimurti exhibition catalogue, 1988.<br><br>Staged as a sequel to Quintet, the 1987 Nanyang Academy of Fine Arts graduate show, Trimurti broke from the formal stillness of a conventional gallery. Drawing on Taoist, Hindu and Sufi philosophies, the artists reimagined the exhibition space as a living, breathing environment. Part live performance, part installation, part exhibition, the event unfolded through paintings, objects and actions that examined the cosmic cycle of life and death. | இந்துக் கடவுளர்களான பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவனுடன் தொடர்புடையதாகும். இங்கு, இயற்கையைப் போல மூன்று சக்திகளின் வெளிப்பாடாக இதை வரையறுக்கிறோம்: படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல்."<br>திரிமூர்த்தி கண்காட்சி பட்டியல், 1988.<br><br>1987-ஆம் ஆண்டு நான்யாங் நுண்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவான 'குவின்டெட்'-இன் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்ட 'திரிமூர்த்தி', ஒரு வழக்கமான கலைக்கூடத்தின் முறையான அமைதியிலிருந்து விலகிச் சென்றது. தாவோயிசம், இந்து மற்றும் சூஃபி தத்துவங்களை அடிப்படையாக கொண்டு, கலைஞர்கள் கண்காட்சி இடத்தை உயிருள்ள, சுவாசிக்கும் சூழலாக மீண்டும் கற்பனை செய்தனர். நேரடி நிகழ்த்து கலை, கலை நிறுவல் மற்றும் கண்காட்சி ஆகியவற்றின் கலவையாக அமைந்த இந்நிகழ்வு, பிறப்பு மற்றும் இறப்பு எனும் பிரபஞ்சச் சுழற்சியை ஆராயும் ஓவியங்கள், பொருட்கள் மற்றும் செயல்பாடுகள் வாயிலாக அரங்கேறியது. |
| Lee Wen (李文)<br>(b. 1957, Singapore; d. 2019, Singapore)<br>Journey of A Yellow Man No. 11: Multi-Culturalism<br>1997<br>Inkjet print on paper<br>Collection of National Gallery Singapore<br>2014-01370 | லீ வென் (李文)<br>(பிறப்பு 1957, சிங்கப்பூர்; இறப்பு 2019, சிங்கப்பூர்)<br>ஒரு மஞ்சள் மனிதனின் பயணம் எண். 11: பல்வேறு பண்பாட்டுகள்<br>1997<br>காகிதத்தில் இன்க்ஜெட் அச்சு |

| | |
|---|---|
| Since 1992, Lee Wen had appeared as the “Yellow Man” all over the world. This particular performance took place at The Substation in 1997, where he gave a lecture before stepping into a tub to wash the yellow paint from his body. His performance was both symbolic and pointed—a critique of Singapore Art ’97 for over-representing ink and watercolour at the expense of performance and installation art. | சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் சேகரிப்பு 2014-01370<br><br>1992 முதல், லீ வென் “மஞ்சள் மனிதன்” என்ற உருவத்தில் உலகம் முழுவதும் தோன்றினார். இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சி 1997-இல் தி சப்ஸ்டேஷன் எனும் இடத்தில் நடைபெற்றது; அங்கு அவர் ஒரு தொட்டியில் இறங்கித் தன் உடலில் பூசப்பட்டிருந்த மஞ்சள் நிறச் சாயத்தைக் கழுவுவதற்கு முன்னதாக ஓர் உரையை நிகழ்த்தினார். அவரது படைப்பு, குறியீடாகவும் கூர்மையாகவும் அமைந்திருந்தது—செயல்திறன் கலை மற்றும் நிறுவல் கலையைப் புறக்கணித்து, மை மற்றும் நீர்வண்ண ஓவியங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்த சிங்கப்பூர் ஆர்ட் ’97 விழாவின் மீதான ஒரு விமர்சனமாக அது இருந்தது. |
| Top left<br>Juliana Yasin<br>(b. 1970, Singapore; d. 2014, Singapore)<br>Kite Series 8<br>2000<br>Acrylic on paper<br><br>Top right<br>Benjamin Puah (潘家定)<br>(b. 1976, Singapore)<br>Having my cup of tea when Vincent was sleeping<br>2000<br>Print on paper<br><br>Middle left<br>Yvonne Lee (李翠华)<br>(b. 1972, Singapore) | மேல் இடது<br>ஜூலியானா யாசின்<br>(பிறப்பு 1970, சிங்கப்பூர்; இறப்பு 2014, சிங்கப்பூர்)<br>கைட் சீரிஸ் 8<br>2000<br>காகிதத்தில் அக்ரிலிக்<br><br>மேல் வலது<br>பெஞ்சமின் பூவா (潘家定)<br>(பிறப்பு: 1976, சிங்கப்பூர்)<br>வின்சென்ட் தூங்கிக்கொண்டிருந்தபோது நான் தேநீர் குடித்தேன்<br>2000<br>காகிதத்தில் அச்சு |

| | |
|---|---|
| Untitled<br>2000<br>Woodblock print on paper<br><br>Vincent Leow (廖芳炎)<br>(b. 1961, Singapore)<br>Lotus<br>2000<br>Woodblock print on paper<br><br>Bottom left<br>Zulharli Adnan<br>(b. 1977, Malaysia)<br>Zip it<br>2000<br>Risograph on paper<br><br>Bottom right<br>Zainudin Samsuri<br>(b. 1974, Singapore)<br>Being<br>2000<br>Woodblock print on paper<br>Collection of National Gallery Singapore<br><br>The works displayed here are part of Boxed: 26 × 26, a set of works on paper created by artists and collaborators to commemorate Plastique Kinetic Worms (PKW)'s second anniversary and to raise funds for the collective. Founded in 1998 by Singaporean artists Vincent Leow and Yvonne Low, PKW was one of the few artist-run spaces to emerge during a period when many others in Singapore had ceased operations.<br>With The Artists Village and 5th Passage spaces no longer active, PKW became a crucial site for contemporary and experimental art. Over the following decade, it fostered international collaborations, supported younger artists and offered a space for curators and researchers to engage with Singapore's evolving art scene. PKW's presence extended beyond the local, with | நடு இடது<br>யவோன் லீ (李翠华)<br>(பிறப்பு: 1972, சிங்கப்பூர்)<br>பெயரிடப்படாதது<br>2000<br>காகிதத்தில் மர அச்சு<br><br>வின்சென்ட் லியோ (廖芳炎)<br>(பிறப்பு: 1961, சிங்கப்பூர்)<br>தாமரை<br>2000<br>காகிதத்தில் மர அச்சு<br><br>கீழ் இடது<br>சுல்ஹர்லி அத்னான்<br>(பிறப்பு: 1977, மலேசியா)<br>ஜிப் இட்<br>2000<br>காகிதத்தில் ரிசோகிராப்<br><br>கீழ் வலது<br>சைனுதின் சம்சுரி<br>(பிறப்பு: 1974, சிங்கப்பூர்)<br>இருத்தல்<br>2000<br>காகிதத்தில் மர அச்சு<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு<br><br>இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ள படைப்புகள் 'பாக்ஸ்ட்'-இன் ஒரு பகுதியாகும்: பிளாஸ்டிக் கைனடிக் வார்ம்ஸ் (PKW) அமைப்பின் இரண்டாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடவும், அந்த அமைப்பிற்கான நிதியைத் திரட்டவும் கலைஞர்கள் மற்றும் அவர்களுடன் இணைந்து பணியாற்றியவர்களால் காகிதத்தில் உருவாக்கப்பட்ட படைப்புகளின் தொகுப்புதான் 26 × 26 ஆகும். சிங்கப்பூர் கலைஞர்களான வின்சென்ட் லியோ மற்றும் இவோன் லோ |

| | |
|---|---|
| the collective's participation in the 2002 Gwangju Biennale. | ஆகியோரால் 1998-இல் நிறுவப்பட்ட PKW, சிங்கப்பூரில் பல கலைக்கூடங்கள் தங்கள் செயல்பாடுகளை நிறுத்தியிருந்த காலகட்டத்தில் உருவான, கலைஞர்களால் நடத்தப்பட்ட வெகு சில இடங்களில் ஒன்றாகும். தி ஆர்ட்டிஸ்ட்ஸ் வில்லேஜ் மற்றும் பிஃப்த் பேசேஜ் ஆகிய கலைக்கூடங்கள் செயல்படாமல் போன நிலையில், சமகால மற்றும் பரிசோதனை முயற்சிகளுக்குரிய கலைக்கான ஒரு முக்கிய இடமாக PKW மாறியது. அடுத்த பத்தாண்டுகளில், இது சர்வதேச அளவிலான கூட்டு முயற்சிகளை ஊக்குவித்தது, இளம் கலைஞர்களுக்கு ஆதரவளித்தது, அத்துடன் சிங்கப்பூரின் மாறிவரும் கலைச் சூழலில் கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் ஈடுபடுவதற்கான ஒரு களத்தையும் வழங்கியது. 2002-ஆம் ஆண்டு நடைபெற்ற குவாங்ஜு பியன்னலேவில் பங்கேற்றதன் மூலம், PKW-இன் செயல்பாடு உள்ளூர் அளவைத் தாண்டி விரிவடைந்தது. |
| Dominique Hui (许嘉欣)<br>(b. 1972, Singapore)<br>Statue of Liberty<br>1992<br>Chinese ink and gouache on paper and newspaper<br>Collection of National Gallery Singapore<br>1995-02054<br><br>Statue of Liberty was created at The Space, the former Hong Bee Warehouse where Tang Da Wu and The Artists Village held a series of experimental art projects | டொமினிக் ஹுய் (许嘉欣)<br>(பிறப்பு: 1972, சிங்கப்பூர்)<br>ஸ்டேச்யூ ஆஃப் லிபர்டி<br>1992<br>காகிதம் மற்றும் செய்தித்தாள் மீது சீன மை மற்றும் கௌவாஷ்<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 1995-02054<br><br>1990களின் ஆரம்பத்தில் டாங் டா வூ மற்றும் தி ஆர்டிஸ்ட்ஸ் |

| | |
|---|---|
| in the early 1990s. The work continues Dominique Hui's graffiti-inspired series shown at the same site. Hui layered collage over the female form to explore themes of censorship. In this work, gender is left intentionally open. Male, female and androgynous figures appear side by side, suggesting the fluid and contested views of gender during the 1990s. The use of American pop iconography and production of body images reflect the pervasiveness of Western media of that time. | வில்லேஜ் ஆகியோர் தொடர்ச்சியான சோதனைக் கலைத் திட்டங்களை நடத்திய, முன்னாள் ஹாங் பீ கிடங்கான தி ஸ்பேஸ்-இல் சுதந்திர தேவி சிலை உருவாக்கப்பட்டது. இந்தப் படைப்பு, அதே இடத்தில் காட்சிப்படுத்தப்பட்ட டொமினிக் ஹூயின் கிராஃபிட்டி பாணியிலான தொடரின் அடுத்த பாகமாகும். தணிக்கை என்ற கருப்பொருளை ஆராய்வதற்காக, ஹுய் பெண் உருவத்தின் மீது படத்துண்டுகளை அடுக்கினார். இப்படைப்பில், பாலினம் வேண்டுமென்றே வரையறுக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. ஆண், பெண் மற்றும் இருபால் தன்மைகளும் கொண்ட உருவங்கள் அருகருகே காணப்படுகின்றன; இது 1990-களில் பாலினம் குறித்த மாறுபடும் மற்றும் விவாதத்திற்குரிய கண்ணோட்டங்களை உணர்த்துகிறது. அமெரிக்க பாப் கலாச்சாரக் குறியீடுகளின் பயன்பாடும் உடல் தோற்றங்களின் உருவாக்கமும் அக்காலகட்டத்தில் மேலைநாட்டு ஊடகங்கள் கொண்டிருந்த பரவலான ஆதிக்கத்தைப் பிரதிபலிக்கின்றன. |
| Khairul Anwar Salleh<br>(b. 1965, Singapore)<br>A Study of 3 Thermos Flasks<br>1990<br>Acrylic, ink, coloured markers and pen on canvas<br>Collection of National Gallery Singapore<br>2020-00485 | கைருல் அன்வர் சல்லே<br>(பிறப்பு: 1965, சிங்கப்பூர்)<br>மூன்று தெர்மோஸ் குடுவைகள் குறித்த ஓர் ஆய்வு<br>1990<br>கேன்வாஸில் அக்ரிலிக், மை, வண்ண மார்க்கர்கள் மற்றும் பேனா |

| | |
|---|---|
| At first glance, this raw still life feels casual— even careless. Yet, beneath the surface is Khairul Anwar Salleh's mischievous response to the mood of contemporary art in 1990s Singapore. Khairul found much of his peers' works heavy with angst and weighed down by global sociopolitical changes. His answer was to take a playful defiance. The nonchalant brushstrokes and visible corrections are nods to Abstract Expressionism and Pop Art. This painting was featured in Khairul's first solo exhibition at The Substation in October 1990, and later inspired sculptor Faizal Fadil's 1991 readymade sculpture of the same name. | நேஷனல் கேலரி சிங்கப்பூரின் சேகரிப்பு 2020-00485<br><br>முதல் பார்வையில், இந்த இயல்பான உயிரற்றப் பொருள் ஓவியம் சாதாரணமாகவும், ஏன், அக்கறையற்றதாகவும் கூடத் தோன்றுகிறது. ஆயினும், மேலோட்டமாகப் பார்க்கையில், 1990-களின் சிங்கப்பூரில் நிலவிய சமகாலக் கலையின் மனநிலைக்கு கைருல் அன்வர் சல்லேவின் குறும்புத்தனமான எதிர்வினை அடங்கியுள்ளது. தனது சமகாலத்தவர்களின் படைப்புகளில் பெரும்பாலானவை மிகுந்த மனவேதனையுடனும், உலகளாவிய சமூக-அரசியல் மாற்றங்களின் பாரத்துடனும் அமைந்திருப்பதாகக் கைருல் கண்டார். அவரது பதில், ஒரு விளையாட்டுத்தனமான எதிர்ப்பை வெளிப்படுத்துவதாக அமைந்தது. அலட்சியமான தூரிகை வீச்சுகளும், வெளிப்படையாகத் தெரியும் திருத்தங்களும் அருவ வெளிப்பாட்டியல் மற்றும் பாப் கலையை நினைவூட்டுகின்றன. இந்த ஓவியம், 1990 அக்டோபரில் 'தி சப்ஸ்டேஷன்'-இல் நடைபெற்ற கைருலின் முதல் தனி கண்காட்சியில் இடம்பெற்றது. பின்னர், இது 1991-இல் சிற்பி ஃபைசல் ஃபதிலின் அதே பெயரிலான ஆயத்த சிற்பத்திற்கு உத்வேகம் அளித்தது. |
| Suzann Victor<br>(b. 1959, Singapore)<br>Still Life<br>1992/2025<br>Eggplants and metal clips | சுசான் விக்டர்<br>(பிறப்பு: 1959, சிங்கப்பூர்)<br>நிலையான வாழ்க்கை<br>1992/2025 |

| | |
|---|---|
| Commissioned by National Gallery Singapore<br><br>Originally conceptualised in 1992 for Body Fields, a live performance event curated by 5th Passage at Parkway Parade, Still Life is considered an early example of site-specific installation in Singapore. At the heart of the work is the humble aubergine, or brinjal—a perishable fruit that serves as a cheeky euphemism for the phallic. Decades before the emoji era, the reference was already at play, being provocative.<br>The work introduces several recurring motifs in Suzann Victor's practice, such as the use of organic materials and the slow, inevitable process of decay to conjure the passage of time.<br><br>The aubergines in the work are replaced monthly. The old aubergines will be donated to Ground-Up Initiative (GUI), a non-profit social organisation, for composting in their community farm. | கத்தரிக்காய்களும் உலோகக் கிளிப்புகளும்<br>சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தால் ஆணையிடப்பட்டது<br><br>முதலில் 1992 -இல் கருத்தாக்கம் செய்யப்பட்டது<br>பார்க்வே பரேடில் பிப்த் பாசேஜ் அமைப்பால் ஒருங்கிணைக்கப்பட்ட 'பாடி ஃபீல்ட்ஸ்' என்ற நேரடி நிகழ்த்து கலை நிகழ்வான ஸ்டில் லைஃப், சிங்கப்பூரில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கான நிறுவல் கலையின் ஆரம்பகால உதாரணமாகக் கருதப்படுகிறது. இப்படைப்பின் மையத்தில் இருப்பது எளிமையான கத்தரிக்காய் ஆகும்; இது விரைவில் கெட்டுப்போகக்கூடிய ஒரு காய்கறியாக இருந்தாலும், ஆண்குறியைக் குறிக்கும் ஒரு குறும்புத்தனமான குறியீடாகவும் இது விளங்குகிறது. எமோஜி யுகத்திற்குப் பல தசாப்தங்களுக்கு முன்பே, அந்தப் பயன்பாடு புழக்கத்தில் இருந்து வந்ததுடன், அது ஒருவிதத் தூண்டுதலையும் ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது.<br>இயற்கை மூலப்பொருட்களின் பயன்பாடு மற்றும் காலத்தின் ஓட்டத்தை உணர்த்தும் வகையிலான மெதுவான, தவிர்க்க முடியாத சிதைவுச் செயல்முறை போன்ற, சுசான் விக்டரின் கலைப்பணியில் மீண்டும் மீண்டும் இடம்பெறும் பல கூறுகளை இக்கலைப்படைப்பு அறிமுகப்படுத்துகிறது. |

| | |
|---|---|
| | இப்படைப்பில் உள்ள<br>கத்திரிக்காய்கள் மாதந்தோறும்<br>மாற்றப்படுகின்றன. பழைய<br>கத்திரிக்காய்கள், 'கிரவுண்ட்-அப்<br>இனிஷியேட்டிவ்' (GUI) எனும்<br>இலாப நோக்கற்ற சமூக<br>அமைப்புக்கு, அவர்களின் சமூகப்<br>பண்ணையில் மட்கும் உரமாக<br>மாற்றுவதற்காக வழங்கப்படும். |
| Ming Wong (黄汉明)<br>(b. 1971, Singapore)<br>Four Malay Stories Redux<br>2005/2025<br>Video, four-channel, black and white<br>wardrobe and LED screens<br>Commissioned by National Gallery<br>Singapore<br><br>In Four Malay Stories Redux, Ming Wong<br>interweaves the original P. Ramlee movie<br>clips with footage from Wong's Four<br>Malay Stories (2005) through a custom-<br>designed digital filter. The resulting video<br>flickers with horizontal strips, resembling<br>glitches on ageing CRT television<br>screens. At intervals, the original Ramlee<br>film scenes interrupt or "corrupt"<br>the footage.<br>Wong created the redux version in 2025<br>because fewer people now remember<br>P. Ramlee's films and contributions to<br>Malayan cinema. The redux version<br>opens up a direct dialogue between the<br>"original" and "remake/reinterpretation,"<br>revealing the gaps, mistakes and<br>imperfections that are central to Wong's<br>re-stagings. | மிங் வாங் (黄汉明)<br>(பிறப்பு: 1971, சிங்கப்பூர்)<br>நான்கு மலாய் கதைகள்: ரிடக்ஸ்<br>2005/2025<br>நான்கு-சேனல் காணொளி,<br>கருப்பு-வெள்ளை அலமாரி<br>மற்றும் LED திரைகள்<br>சிங்கப்பூர் தேசியக்<br>கலைக்கூடத்தால்<br>ஆணையிடப்பட்டது<br><br>ஃபோர் மலாய் ஸ்டோரீஸ் ரீடக்ஸ்<br>என்ற படைப்பில், மிங் வோங்,<br>அசல் பி. ராம்லீ திரைப்படக்<br>காட்சிகளையும், வோங்<br>உருவாக்கிய ஃபோர் மலாய்<br>ஸ்டோரீஸ் (2005) படத்தின்<br>காட்சிகளையும், தனிப்பயனாக<br>வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல்<br>ஃபில்டர் மூலம் ஒன்றோடொன்று<br>இணைத்துள்ளார். இதன்<br>விளைவாக உருவாகும்<br>வீடியோவில், வயதாகிவிட்ட CRT<br>தொலைக்காட்சித் திரைகளில்<br>ஏற்படும் கோளாறுகளைப்<br>போன்ற தோற்றத்துடன்,<br>கிடைமட்ட கோடுகள்<br>மினுமினுத்தபடி<br>காட்சியளிக்கின்றன.<br>இடையிடையே, அசல் ராம்லீ<br>திரைப்படக் காட்சிகள்<br>குறுக்கிட்டு, அல்லது அந்தக்<br>காட்சிப் பதிவில் "கோளாறு" |

| | |
|---|---|
| | ஏற்படுத்துவது போல தோன்றுகின்றன.<br>இப்போது பி. ரம்லீ படங்களும் மலாயா சினிமாவிற்கான அவரது பங்களிப்பும் குறைவாக நினைவில் இருப்பதால், வாங் 2025-இல் இந்த ரிடக்ஸ் பதிப்பை உருவாக்கினார்<br>பி. ராம்லீ படங்களும் மலாயா சினிமாவிற்கான அவரது பங்களிப்பும். இந்தத் திருத்தப்பட்ட பதிப்பானது, 'அசல்' மற்றும் 'மறு உருவாக்கம்/மறு விளக்கம்' ஆகியவற்றுக்கு இடையே ஒரு நேரடி உரையாடலைத் தொடங்கி, வோங்கின் மறு அரங்கேற்றங்களின் மையமாக விளங்கும் இடைவெளிகள், தவறுகள் மற்றும் குறைபாடுகளை வெளிப்படுத்துகிறது. |
| Ho Soon Yeen (何舜莹)<br>(b. 1970, Singapore)<br>Lanterns Never Go Out<br>Programme Cover<br>Original 1994, reproduced 2025 Digital print on vinyl<br>© The Necessary Stage<br>This iteration of the play was staged from 17–19 March 1994 at Guiness Theatre, The Substation.<br>Director: Elvira Holmberg Playwright: Haresh Sharma Production Manager: Clarisse Ng Stage Manager: Charmaine Tan Lighting Design: Thio Lay Hoon Sound & Music: Hossan Leong Poster Design: Ho Soon Yeen<br><br>Written in 1989, Lanterns Never Go Out was the debut play by Haresh Sharma for The Necessary Stage (est. 1987), a non-profit theatre company. The play takes its title from Singaporean writer Dr. | ஹோ சூன் யீன் (何舜莹)<br>(பிறப்பு: 1970, சிங்கப்பூர்)<br>விளக்குகள் ஒருபோதும் அணைவதில்லை<br>நிகழ்ச்சித் தொகுப்பு அட்டை<br>அசல் 1994, மறுஉருவாக்கம் 2025 - வினைல் மீதான டிஜிட்டல் அச்சு<br>© தி நெசெஸரி ஸ்டேஜ்<br>இவ்வடிவிலான நாடகம் 1994 மார்ச் 17 முதல் 19 வரை தி சப்ஸ்டேஷனில் உள்ள கின்னஸ் அரங்கில் மேடையேற்றப்பட்டது.<br>இயக்குநர்: எல்விரா ஹோல்ம்பெர்க், நாடக ஆசிரியர்: ஹரேஷ் ஷர்மா, தயாரிப்பு மேலாளர்: கிளாரிஸ் என்ஜி - மேடை மேலாளர்: சார்மைன் டான் லைட்டிங் டிசைன்: தியோ லே ஹூன் ஒலி மற்றும் இசை: |

| | |
|---|---|
| Geraldine Heng's poem Little Things (1983).<br>The story centres on a teenager preparing for her GCE 'O' Level examinations that will take place the following year, a pivotal academic milestone in Singapore's education system. As she navigates relationships and becomes increasingly aware of societal and familial expectations, the play explores her evolving sense of self and her existential questioning of adulthood.<br>For the 1994 production, artist-educator Ho Soon Yeen designed the programme cover and poster. Ho also contributed to Singapore's theatre scene as an actor in Practice Theatre Ensemble's Death of a Hero (1995) and created the graphic design for Drama Box's The vaginaLOGUE (2003, 2008). | ஹொரசன் லியோங், போஸ்டர் டிசைன்: ஹோ சூன் யீன்<br><br>1989-ஆம் ஆண்டு எழுதப்பட்ட லான்டர்ன்ஸ் நெவர் கோ அவுட் 1987-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலாப நோக்கற்ற நாடக நிறுவனமான தி நெசெஸரி ஸ்டேஜ் நிறுவனத்திற்காக ஹரேஷ் சர்மா எழுதிய முதல் நாடகமாகும். சிங்கப்பூர் எழுத்தாளர் டாக்டர் ஜெரால்டின் ஹெங் எழுதிய 'லிட்டில் திங்ஸ்' (1983) என்ற கவிதையிலிருந்து இந்நாடகத்தின் தலைப்பு பெறப்பட்டுள்ளது.<br>இந்தக் கதை, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள GCE 'O' லெவர் தேர்வுகளுக்குத் தயாராகும் ஒரு பதின்ம வயதுப் பெண்ணை மையமாகக் கொண்டது. இது சிங்கப்பூரின் கல்வி முறையில் மாணவர்களின் கல்விப் பயணத்தில் முக்கியமான ஒரு கட்டமாகும். அவர் தனது உறவுகளைச் சமாளித்துக்கொண்டு, சமூகம் மற்றும் குடும்பத்தினரின் எதிர்பார்ப்புகளைப் பற்றி படிப்படியாக அதிகமாக உணரத் தொடங்குகிறார். இந்த நிலையில், அவருக்குள் மாறிவரும் சுய உணர்வையும், வயது வந்தோரின் வாழ்க்கையைப் பற்றிய அவரது ஆழமான கேள்விகளையும் இந்த நாடகம் ஆராய்கிறது.<br>1994-ஆம் ஆண்டு நடைபெற்ற தயாரிப்பிற்காக, கலைஞர் மற்றும் கல்வியாளரான ஹோ சூன் யீன் நிகழ்ச்சி நிரலின் அட்டைப்படத்தையும் சுவரொட்டியையும் |

| | |
|---|---|
| | வடிவமைத்தார். ஹோ, பிராக்டிஸ் தியேட்டர் என்செம்பிளின் டெத் ஆஃப் எ ஹீரோ (1995) நாடகத்தில் நடிகராகப் பணியாற்றியதன் மூலமும், டிராமா பாக்ஸின் 'தி வஜினாலாக்' (2003, 2008) நாடகத்திற்கான வரைகலை வடிவமைப்பை உருவாக்கியதன் மூலமும் சிங்கப்பூரின் நாடகத்துறைக்கு பங்களித்துள்ளார். |
| National Language Class Flyer<br>A production by spell#7performance<br>Original 2008, reproduced 2025 Digital print on vinyl<br>© spell#7performance<br>This iteration of the play was staged from 3–5 April 2008 at Theatre Studio, Esplanade – Theatres on the Bay.<br>Director: Paul Rae<br>Cast: Noor Effendy Ibrahim, Yeo Yann Yann<br><br>National Language Class takes its title from Chua Mia Tee's 1959 painting of the same name, which depicts a Malay teacher teaching a group of Chinese students the Malay language. The play was first conceptualised by actor-artist-educator Noor Effendy Ibrahim in 2005 as a performance and installation before being developed into a play with spell#7performance, responding to concerns about building a nascent national identity and language.<br>The play recreates the scene from the painting, providing a space for audiences to question the power dynamics between teacher and students, as well as between mother-tongue speakers and newer migrants to Singapore. In the 2008 iteration, artist-educator and thespian Noor Effendy Ibrahim plays the role of the | தேசிய மொழி வகுப்புக்கான துண்டுப்பிரசுரம்<br>ஸ்பெல்#7பெர்ஃபார்மன்ஸின் ஒரு தயாரிப்பு<br>அசல் 2008, மறுபதிப்பு ஆண்டு: 2025 - வினைல் மீதான டிஜிட்டல் அச்சு<br>© ஸ்பெல்#7பெர்ஃபார்மன்ஸ்<br>இந்த நாடகத்தின் இந்தப் பதிப்பு 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 முதல் 5 ஆம் தேதி வரை, எஸ்பிளனேட் – தியேட்டர்ஸ் ஆன் தி பேயில் உள்ள தியேட்டர் ஸ்டுடியோவில் அரங்கேற்றப்பட்டது.<br>இயக்குநர்: பால் ரே<br>நடிகர்கள்: நூர் எஃபண்டி இப்ராஹிம், யியோ யான் யான்<br><br>'தேசிய மொழி வகுப்பு' என்ற தலைப்பு, சுவா மியா டீயின் 1959 ஆம் ஆண்டு அதே பெயரில் வரையப்பட்ட ஓவியத்திலிருந்து எடுக்கப்பட்டது. அந்த ஓவியத்தில், ஒரு மலாய் ஆசிரியர் சீன மாணவர் குழுவிற்கு மலாய் மொழியைக் கற்பிப்பது சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த நாடகம் முதன்முதலில் 2005 ஆம் ஆண்டு நடிகர்-கலைஞர்-கல்வியாளர் நூர் எஃபெண்டி |

| | |
|---|---|
| Malay teacher, while actress Yeo Yann Yann plays the student. | இப்ராஹிம் அவர்களால் ஒரு நிகழ்த்து கலை மற்றும் நிறுவல் கலைப் படைப்பாக உருவாக்கப்பட்டது. பின்னர், தேசிய அடையாளம் மற்றும் மொழியை உருவாக்குவது தொடர்பான கவலைகளுக்குப் பதிலளிக்கும் வகையில், ஸ்பெல்#7 பெர்ஃபார்மன்ஸ் உடன் இணைந்து இது ஒரு முழுமையான நாடகமாக உருவாக்கப்பட்டது. இவ்வடகம் அந்த ஓவியத்தில் உள்ள காட்சியை மறு உருவாக்கம் செய்கிறது; இதன் மூலம், ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு இடையிலான அதிகார உறவுகள் குறித்தும், தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கும் சிங்கப்பூருக்குப் புதிதாகக் குடியேறியவர்களுக்கும் இடையிலான உறவுநிலைகள் குறித்தும் கேள்வி எழுப்புவதற்கான ஒரு களத்தை இது பார்வையாளர்களுக்கு வழங்குகிறது. 2008-ஆம் ஆண்டு நிகழ்வில், கலைஞர்-கல்வியாளர் மற்றும் நாடகக் கலைஞரான நூர் எஃபெண்டி இப்ராஹிம் மலாய் மொழி ஆசிரியராகவும், நடிகை யோ யான் யான் மாணவியாகவும் நடிக்கின்றனர். |